“பா.ஜ.க. நேர்மையானதாக இருந்தால்

மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும்!

‘ரிபப்ளிக்’ தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அர்னாப் கோசுவாமி காரசார விவாதம் !

மும்பை, ஜூலை 29 – மும்பையிலிருந்து செயல்பட்டு வரும்ரிபப்ளிக்தொலைக்காட்சியில் நேரலையில் ‘ஜஸ்டிஸ் பார் மணிப் பூர்”என்ற விவாத நிகழ்ச்சி நடந்தது. அந்த நேரலை விவாத நிகழ்ச்சியில் பாஜ.க பிரதிநிதி, பத்திரிகையாளர், ஆம் ஆத்மி பிரதிநிதி, சமாஜ்வாடி பிரதிநிதி, திரிணாமுல் காங்கிரஸ் பிரதிநிதி ஆகியோர் பங்கேற்றனர். அப்போது, நெறியாளரும், ரிபப்ளிக் தொலைக்காட்சியின் தலைமை செய்தி ஆசிரியருமான அர்னாப் கோசுவாமி தனது காரசாரமான கருத்துகளை முன் வைத்தார்.

அதன் விபரம் வருமாறு :

“இந்த நேரத்தில் எனக்கு ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அதாவது, நிர்பயா விவகாரத்தில் உரத்த குரல் எழுப்பிய அப்போதைய பா.ஜ.க, அதற்காக ஒன்றிய அரசை பதவி விலகச் சொல்லி குரல் எழுப்பியது. பா.ஜ.கவின் அந்த நிலைப்பாட்டை அப்போது ஒவ்வொருவருமே வரவேற்றனர்.”

“ஆனால், சாரு, (சாரு பிரக்யா பா.ஜ.க பிரதிநிதி) இந்த முறை ஒரு வித்தியாசமான பா.ஜ.க.வாக அது இருப்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. இது நடந்து(மணிப்பூர் பிரச்சினை)34 நாட்கள் ஆன நிலையில் அதுபற்றி தேசிய மகளிர் ஆணையத்திடம் ஒரு புகார் கூட அளிக்க மறுத்தபா.ஜ.கவாக உள்ளது. அதே பா.ஜ.க தான் பெண்களை நிர்வாணமாக சாலையில் நடக்க வைத்து அழைத்துச் சென்ற அவலம் அரங்கேறி 77 நாட்கள் கழித்தும் அந்த குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு நபரைக்கூட கண்டுபிடிக்கவில்லை. அந்த சம்பவத்திற்கு பா.ஜ.கதான் முழு பொறுப்பேற்றாக வேண்டும்.”

“அந்த மாநிலத்தை ஆட்சி செய்யும் அதேபா.ஜ.க தான், அந்த மாநில காவல்துறையின் கண் முன்னே, நிர்வாணமாக சாலையில் நடக்க வைத்து அழைத்துச் சென்றவர்கள் அந்தப் பெண்களை,வன்முறை கும்பலிடம் ஒப்படைத்து கூட்டு வன்புணர்வு செய்த அவலமும் அரங்கேறியது. அதே பா.ஜ.க அந்த அவலம் குறித்து ஒரு காவல்துறை அதிகாரியிடம் கூட எவ்விதமான விசாரணையையும் மேற்கொள்ளவில்லை.”

“அதே பா.ஜ.க தான் தேசிய பாதுகாப்பு பற்றியெல்லாம் இன்றைக்குப் பேசுகிறது. ஆனால், பிரேன் சிங் ஆட்சி செய்யும் மாநிலத்தில் (மணிப்பூர்) நிறைவேறிய அந்த அவலம் மாநிலம் மற்றும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை விளைவிக்கிறது என்பதை அந்த பா.ஜ.க உணர்ந்திருப்பதாகவே தெரியவில்லை.”

“இந்த விவகாரத்தில் உள்ள சிக்கல் காரணமாக உண்மையில் கவலை அடைந்துள்ளபா.ஜ.க, அதன் பிரதிபலிப்பாக நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் தனது கருத்துகளைத் தெரிவித்து வருகிறது.அரசியல் ரீதியாக தனக்கு பாதிப்பு ஏற்படும் என்ற கவலையிலும் அது உள்ளது, என்பது வெளிப்படை. அதனால் நாடாளுமன்றத்தில் அது குறித்து எவ்வித விவாதம் இல்லை. அரசியல் ரீதியில் பெரும் சங்கடத்தை பா.ஜ.கவுக்கு ஏற்படுத்திய அந்த (மணிப்பூர்) சம்பவம் குறித்து இன்று வரை கூட எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையே!”

“அதனால் சாரு (சாரு பிரக்யா) அவர்களே! இன்றைய இரவில் உங்களுக்கு நான் தெளிவாகத் தெரிவிப்பது என்னவென்றால், நீங்கள் (பா.ஜ.க) நேர்மையானவராக இருந்தால், உங்கள் நேர்மைக்கு ஒரு சோதனை என்ற வகையில் மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துங்கள். நான் உங்களுக்கு துணை நிற்கிறேன். நாங்கள் உங்களுக்கு துணை நிற்கிறோம்.

இவ்வாறு அர்னாப் கோசுவாமி தனது கருத்தை தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற ”வேளாண் சங்கமம் 2023 விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்தார். உடன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், நிதி,மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு.(திருமதி) பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

நாளை நடைபெறுகிறது!

சிவகங்கை மாவட்டத்தில் பாக முகவர்கள் (பி.எல்.ஏ. 2) கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூலை 29 - சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது. நாளை (30.7.2023 - ஞாயிற்றுக் கிழமை) மற்றும் ஆகஸ்டு 3ம்தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான பி.எல்.ஏ. 2 பாக முகவர்கள் கூட்டம் கீழ்க் கண்டவாறு நடைபெற உள்ளது. எனவே அங்கீகரிக்கப் பட்ட பாகமுகவர்கள் தவறாது இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் . அவர்களை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை அந்தந்தப குதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் இடங்கள்.

1. நாள் 30. 7. 2023 ஞாயிற்றுக் கிழமை, காலை 10 மணி - சிவகங்கை சட்டமன்றத் தொகுதி, இடம் .ஏ.எம்.கே.மகால், திருப்பத்தூர் சாலை, சிவகங்கை,

2. மானாமதுரை - நேரம் மாலை 4.00மணி - மானாமதுரை சட்டமன்ற தொகுதி. இடம். அனுசுயா மஹால், நகராட்சி அலுவலகம் எதிர்புறம், மானாமதுரை, தேதி 3.8.2023. வியாழக்கிழமை .

3.காரைக்குடி சட்டமன்றத் தொகுதி. நேரம். காலை 10 மணி இடம். அபூர்வ திருமண மண்டபம், காரைக்குடி.

4.திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, நேரம் மாலை 4.00மணி , இடம். செந்தாமணி மஹால் புதுக்கோட்டை சாலை, திருப்பத்தூர், அங்கீகரிக்கப் பட்ட பாக முகவர்கள் மட்டும் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தில் வழங்கப்படும் ஆலோசனைகளை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

மேலும் வருகிற ஆகஸ்ட் 16ஆம் தேதி ராமநாதபுரத்தில் நடைபெறும் பாகமுகவர்கள் கூட்டத்தில் கழக தலைவரும் முதல்வருமான தளபதி அவர்கள் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாகமுகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

எனவே இந்த கூட்டம் மிகவும் முக்கியமானதாகும் . அனைத்து பாகமுகவர்களும் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தெரிவித்து உள்ளார்.

தனித்துவம் மிக்க ஓவியங்களால்

தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவர் ஓவியர் மாருதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜூலை 29 - கலைமாமணி விருது பெற்ற ஓவியர் மாருதி அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தனித்துவம் மிக்க ஓவியங்களால் தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஓவியர் மாருதி அவர்களின் மறைவையொட்டி

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ் வார இதழ்களில் தமது தூரிகையால் கோலோச்சி தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்ற ஓவியர் மாருதி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் வருந்தினேன்.

தனித்துவம் மிக்க தனது ஓவியங்களால் தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்றிருப்பவர். முத்தமிழறிஞர் கலைஞரின் திரைப்படங்களில் பணியாற்றியவர்.

அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் மற்றும் வாசகர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கி றேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சண்.குமரவேல் தலைமை! ச.அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை!

மங்கலம் தொகுதியில் கலைஞர் நூற்றாண்டுப் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

திண்டுக்கல் ஐ.லியோனி – இரா.சிவா சிறப்புரை!

புதுச்சேரி, ஜூலை 29 - புதுச்சேரி மங்கலம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் அரியூர் அங்காளம்மன் கோவில் எதிரில் நடைபெற்றது. மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல் தலைமை தாங்கினார். தொகுதி செயலாளர் ச. அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை ஆற்றினார். பொதுக்குழு உறுப்பினர் அ. சோமசுந்தரம், கா. பரமபதம், முருகதாஸ், அவைத்தலைவர் சே. புஷ்பராஜ், துணைச் செயலாளர் க. ஐய்யனார், மகளிர் அணி எம்.புஷ்பலதா, ச. பாக்கியலட்சுமி சாரங்கம், க. கவிதா கண்ணியப்பன், பொருளாளர் டி.எம்.எஸ். (எ) வே. தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது, பிரதமர் மோடி உளுந்தே இல்லாமல் ஆயிரம் வடை சுடக் கூடிய டுபாக்கூர். இவர் தமிழ்நாட்டில் தமிழக மக்களை தன்வசம் இருப்பதற்காக திருக்குறளை வாசிக்கிறார். மோடியின் இந்த செயல் தமிழ்நாட்டில் நடக்காது. இதேபோன்று ஆளுநர் ரவியும் செய்து வருகிறார். புதுச்சேரி ஆளுநரின் தலையாட்டிப் பொம்மையாக ரங்கசாமி உள்ளார். ஆனால் தமிழ்நாடு முதல்வர் இவரை போல் இல்லாமல் தன்மானம் மிக்கவராக உள்ளார். கடந்த 9 ஆண்டுகளாக நாட்டை பா.ஜ.க. நாசமாக்கி விட்டது. என்.டி.ஏ. கூட்டணி துரோகிகளின் கூட்டணி. இதற்கு மோடி தான் தலைவர். இந்தியா கூட்டணி நாடு முழுவதும் ஆட்சி அமைக்கும். அண்ணாமலையை கர்நாடகாவில் விரட்டி அடித்தது போல் தமிழ்நாட்டிலும் விரட்டியடிப்பார்கள்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி பெண்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைக் காப்பாற்றுவது பெண்கள் தான். புதுச்சேரியிலும் உதயசூரியன் ஆட்சி அமைத்து திராவிட மாடல் ஆட்சி நடக்கும். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பெண் மணி புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தமிழ்நாடு பாடநூலை நீக்கிவிட்டு சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை அமல்படுத்தி துரோகம் செய்துள்ளார். இவர் ஒரு தமிழினத் துரோகி. இந்த துரோ கத்துக்கு முடிவு கட்ட புதுச்சேரியில் தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 வெற்றி பெற்று இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு திண்டுக்கல் லியோனி பேசினார்.

இரா.சிவா பேச்சு!

முன்னதாக புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சிவா பேசும்போது,

புதுச்சேரியில் மிக மோசமான பாவப்பட்ட ஆட்சி நடைபெற்று வருகிறது. மக்களை ஏமாற்றக் கூட கூடிய செயல்களை செய்ய வேண்டாம். தமிழகத்தில் 6 முதல் 12ம். வகுப்பு வரை அரசு பள்ளி படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5% உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் புதுச்சேரியில் ஒன்றாம் வகுப்பு 10ம் வகுப்பு வரை அரசு பள்ளி படிக்கும் மாணவர்களுக்கு தான் மருத்துவக் கல்லூரியில் 10% இடம் ஒதுக்கி வழங்கப்படும் என கூறுகிறார். இதற்காக நாங்கள் இன்னொரு குழந்தையை பெற்றுக் கொண்டா படிக்க வைக்க முடியும்.

இவ்வாறு இரா.சிவா பேசினார்.

தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த பொதுக் கூட்டத்தில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., கழகப் பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ., ஆகியோர் பேசினர்.

இதில், துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ராமசாமி, ப.செல்வநாதன், எஸ். தர்மராஜன், பா.செ.சக்திவேல், ந.தங்கவேலு, சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், ஆர்.கோகுல், ஆர். ரவீந்திரன், டி.செந்தில்வேலன், ப. இளம்பரிதி, பெ.பழநி, மு.பிரபாகரன், மற்றும் கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.

கூட்டத்தின் முடிவில் அரியூர். பா. ஏழுமலை நன்றியுரை ஆற்றினார்.

கொரோனா பேரிடர் கால நிவாரணத் தொகையினை அரசு வழங்கியபோது, தனது புன்னகையின் வாயிலாக மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டியின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்ததைத் தொடர்ந்து, கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர் பெரியகருப்பன் அறிவுறுத்தலின் பேரில், கூட்டுறவுத் துறையின் சார்பில் கன்னியாகுமரி மாவட்ட இணை பதிவாளர் சந்திரசேகரன் நேற்று (28.07.2023)பாட்டியின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருப்பத்தூர் அ. மகாதேவன்

ஜூலை 29 (2013)

சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணியாற்றியவர். ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று கழகத்தினை வளர்த்தவர்.

ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

“பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த இவர், அந்தகாலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக பணியாற்றியவர்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்..

தலைமைக் கழகம்

தி.மு.க.

‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!